நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி. V. பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 1344/2026
CNR No.TNTH020022102026

குமரேசன் (34/2026),
த/பெ.பாண்டி ....மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர் அவர்கள்,
அல்லிநகரம் காவல்நிலையம்,
குற்ற எண்.67/2021,
சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

.

இம்மனு இன்றை தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பாண்டியராஜன்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

மனுதாரர் இம்மனுவை பிரிவு 480 BNSS–ன் கீழ் தேனி காவல் நிலைய குற்ற எண்.67/2021, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC–வழக்கிலிருந்து பிணைகோரி தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது. இவ்வழக்கின் எதிரி தேனி மாவட்டம் வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்.480/2026, u/s.397 IPC வழக்கில் சம்மந்தப்பட்டு 02.03.2026 முதல் தேனி மாவட்ட சிறையில் இருந்து வருவதாகவும், மேலும் எதிரி அல்லிநகரம் காவல் நிலையத்தில் பல குற்ற வழக்குகளில் ஈடுப்பட்டு உள்ளதாலும், மேலும் எதிரிக்கு ஜாமீன் வழங்கினால் இவ்வழக்கின் மனுதாருக்கும், எதிரிக்கும் மீண்டும் பிரச்சனை ஏற்படக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், எதிரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகாமல் பலமுறை தலைமறைவாக இருந்து உள்ளார் என்பதாலும், மேலும் தலைமறைவாக கூடும் என்பதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்க மிகக்கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதார்/எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். எதிரியின் ஆஜரின்மை காரணமாக பிடி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு பிடி வாரண்ட் நிறைவேற்றப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதையும், 02.03.2026–லிருந்து நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது. எதிரி 60 நாட்களுக்கு மேலாக நீதிமன்ற காவலில் இருப்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு விசாரணை நிலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டும், இம்மனுவானது அனுமதித்து பின்வருமாறு கீழ்க்கண்ட நிபந்தனைகள் வழங்கி உத்தரவிடப்டுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) மனுதாரர் தனது சார்பாக இரு ஜாமீன்தாரர்களோடு தலா ரூ.10,000/–க்கு பிணைமுறி எழுதித் தரவேண்டும்.

2)மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி 10 நாட்களுக்கு தொடர்ந்து கையெழுத்திட வேண்டும்.

3) எதிரியும், ஜாமீன்தார்களும் தங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்திவரும் கைபேசி எண்ணை குறிப்பிட வேண்டும்.

4)மனுதாரர்/எதிரி சாட்சிகளையோ, சாட்சியங்களையோ கலைக்கக்கூடாது எனவும்,

5)வழக்கு விசாரணை முடியும் வரை வெளிமாநிலம்/வெளிநாட்டுக்கு செல்லக்கூடாது. மனுதாரரின் பாஸ்போர்ட்டினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.

6) பிணைக்காலத்தில் மனுதாரர் இதுபோன்ற குற்றச்செயலிலும் ஈடுப்படக்கூடாது எனவும், வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் எனவும், அழைப்பாணையில் பேரில் அழைக்கும்போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

BHARATHA DEVI
Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.02 16:22:49 +0530

நீதித்துறை நடுவர்,

தேனி.